# உலக இந்தி தினம்-2014

ஜனவரி 09, 2014

வெளியுறவு அமைச்சகம் உலக இந்தி தினத்தை 2014 ஜனவரி 10ந்தேி மாலை 5 மணிக்கு, புது தில்லியில் பேர் சராய் என்ற இடத்தில் உள்ள அயல்நாட்டு சேவை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு நிகழ்ச்சியில் கொண்டாடுகிறது. சிறப்புச் செயலாளர் திரு நவ்தேஜ் சர்ணா தலைமை விருந்தினராக நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இந்தி பயிலும் அயல்நாட்டு மாணவர்களிடையே இந்தி கட்டுரைப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசுகள் மற்றும் புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும். வெளிநாட்டு மாணவர்கள் நிகழ்ச்சியில் இந்தியில் பேசுவார்கள். கவி சங்கோஷ்டிக்கும் நிகழ்ச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆக்ராவில் உள்ள கேந்திரிய இந்தி சன்ஸ்தானில் பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் கலை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகம் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் இந்தியை பரப்புவதற்காக உறுதி பூண்டுள்ளது. முதலாம் உலக இந்தி மாநாடு நாக்பூரில் 2006 ஜனவரி 10ந்தேதி ஏற்பாடு செய்யப்பட்டது. அது முதல் ஆண்டு தோறும் ஜனவரி 10ந்தேதி உலக இந்தி தினம் கடைபிடிக்கப்படுகிறது.

**புது தில்லி**
**ஜனவரி 9, 2014**